பாசிகுளம் கிராமத்துக்கு குடிநீர்த் திட்டம்

*183 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—(அ) விருத்தாசலம் தாலூக்கா, பாசிகுளம் கிராமப் பொதுமக்களிடமிருந்து குடி தண்ணீர் திட்டம் விஷயமாக ஏதேனும் மனு அரசாங்கத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துச்சாமி : (அ) ஆம்.

(இ) இந்தக் கிராமத்திற்கு நீர் வழங்குவதற்கான திட்டம் ஒன்று அரசின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

தென்கரிம்பலூர் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம்

* 184 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு மாவட்டம், செங்கம் தாலூகா, தென் கரிம்பலூர் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கத்தில் இரண்டு லட்சம் ரூபாய் வரையில் கையாடல் செய்யப்பட்டதற்காக எத்தனை பேர்கள் மீது 1969-ம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது ? விவரம் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : குறிப்பிட்ட இந்த சங்கத்தில் ரூ. 28,620 கையாடல் செய்திருப்பது கண்டு பிடிக்கப் பட்டது. எனவே, நிர்வாகக் குழு கலைக்கப்பட்டு, சங்கத்தை நடந்து வதற்கு தனி அதிகாரி நியமிக்கப்பட்டார். போலீசிலும் புகார் செய்யப்பட்டது. கையாடல் செய்த தொகை முழுவதும் திரும்பப் பெறப்பட்டது. கூட்டுறவு சங்கச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதிலே இன்வெஸ்டிகேஷனெல்லாம் செய்து பகிரத முயற்சிக்குப் பிறகு தான் இவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு, கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப் பட்டு விடுதலை செயப்பட்ட பிறகு வேலூர் கெஸ்டு ஹவுஸில் முதல் மந்திரி அவர்களோடு விருந்து சாப்பிட்டது உண்மையா? அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை ஒட்டி உப கேள்வி கேட்கவேண்டும். சாப்பிட்டது, போனது; வந்ததைப்பற்றியெல்லாம் கேள்வி நேரத்தில் கேட்கக்கூடாது. நான் இதை அனுமதிக்கவில்லை. நான் இதை எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன் ? கோதண்டராமன் அவர்கள் நீண்ட நாட்களாக சட்டசபை உறுப்பினராக இருப்பவர். கேள்வி நேரத்தில் கேள்வியை மட்டும் போட வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நான் இதை எதற்குக் குறிப்பிடுகிறேன். என்பதை பின்னால் சொல்கிறேன். பணம் கட்டியிருந்தாலும், அவர்கள் மீது வழக்கு தொடரப்படாமல் இவர்கள் விடப்

பட்டிருப்பது உண்மையா? இவர்களில் ஒருவர் வி.எம்.-மாக இருந்து ரூ. 60,000 கையாடல் செய்தவர், கைது செய்யப்பட்டவர். இருந்தும் மீண்டும் அவருக்கு வி.எம். பதவி கொடுக்கக்கூடிய அளவில் அவர்கள் பேரில் இதுவரைக்கும் நடவடிக்கை எடுக்காமல் தாமதம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் மீது சொன்ன குற்றச்சாட்டை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது 1965-ல் நடந்தது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : 1965-ல் ஊழல் நடந்தால் தப்பு தப்பு தானே? அது மட்டும் நல்லதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : அப்பொழுது, முதல் அமைச்சர் மீது சொன்ன குற்றச்சாட்டை நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்கிவிடவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதை அனுமதிக்கவில்லையே.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : வேறு சில காரியங்களை பற்றிச் சொன்னர். செய்திருக்கக்கூடியவை மிகப் பெரிய தவறுகள் தான். ஆனல், பணம் பூராவும் திரும்பப் பெறப்பட்டுவிட்டது. தவறுகள் பெரிய தவறுகளாக இருந்தாலும், இறந்து போனவர்களுக்குக் கொடுத்ததாக ரூ. 1,000, கடன் வாங்காதவர்களுக்குக் கொடுத்ததாக ரூ. 4,000, இல்லாதவர்களுக்கு, கற்பனைப் பெயருள்ளவர்களுக்குக் கொடுத்ததாக ரூ. 9,000, இப்படி நடந்திருக்கிறது. பிறகு போலீஸாருக்குப் புகார் செய்யப்பட்டிருந்தாலும், பணம் பூராவும் திரும்பப் பெறப்பட்டுவிட்டதால், கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தால் போதும் என்று கருதப் படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இப்படி கூட்டுறவு இலாகாவில் தொடர்ந்து ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் ஊழல் ஏற்படுகிறது. இதற்கெல்லாம் பரிகாரம் சட்டப்படி, முறைப்படி நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறுவார்கள். வருடக் கணக்கில், 10 வருட காலம் கூட வழக்குகள் தொடரப்பட்டிருந்தாலும், இப்படி நீடிக்கப்பட்டு, கடைசியில் கைவிடப்பட்டிருக்கக்கூடிய அளவுக்கு நிலைமை இருந்து வருகிறது. யாராவது ரூ. 5, 10 திருடிவிட்டால், அந்தத் திருடனை லாக்கப்பில் வைத்து, அடித்து வேலை தீர்த்துவிடுகிருர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படியெல்லாம் பொதுவாக பிரசங்கம் செய்துகொண்டிருந்தால் என்ன அர்த்தம் ? கேள்வியைப் போடுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : கூட்டுறவுத் துறையில் இந்த அளவுக்கு ஊழல்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் நீடிக்கக்கூடிய அளவுக்கு இல்லாமல், 6 மாதங்களுக்குள், அதிகபட்சமாக ஒரு

வருடத்திற்குள் இந்த வழக்குகளை முடிக்கக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் கடைசிப் பகுதிக்கு மட்டும் விடையளித்தால் போதும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : காலதாமதம் ஏற்படுவதை இந்த அமைச்சு உணர்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கும் செயற்குறிப்பு இருக்கிறது. காலதாமதம் ஆவதைத் தவிர்ப்பதற்கும், துரிதமாக நடவடிக்கை எடுப்பதற்கும் ஒரே ஒரு வழி தான் இருக்கிறது. போலீஸார் கொஞ்சம் பேர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் கூட்டுறவு துறைக்காக. அவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தினால் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கருதி, அதை விரிவுபடுத்துவதற்கு செயற்குறிப்பு இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். கைது செய்யப்பட்ட குற்றவாளியோடு முதல் அமைச்சர் அவர்கள் அன்று சர்க்யூட் ஹவுஸில் விருந்துண்டார் என்று......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான்தான் அந்தப் பகுதியை அனுமதிக்கவில்லை என்று முதலிலேயே சொல்லிவிட்டேனே.

Dearness Allowance for Village Officers

* 166 *Q*.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Dearness Allowance of the Village Officers has been revised after 1964;

(*b*) if not, whether there is any proposal to revise the same; and

(c) if so, the details thereof ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN—

(a) No.

(*b*) and (*c*) The question of revision of the present structure of pay and dearness allowance of Village Officers has been referred to the Second Pay Commission. The Commission's report in this regard is awaited.

Dr. H. V. HANDE : Will the Hon. Minister be able to tell us whether he has received any petitions from the Village Officers requesting the Government to accept whatever requests they have made to the previous Government and which had been passed on by the previous Government to this Government. This Government had said that they would implement all those requests. Is it not a fact that the present Government has given an assurance like that ? With regard to D.A., is it not a fact that this Government has assured at the Village Officers' meeting that since 1964, the whole thing will be reviewed. May I also know whether they have requested the Government that the new rules must be given effect to and not the old rules. May I also know whether this